Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 216/2024 |
| Police station | : | தூக்கணாம்பாக்கம் P.S |
| Deposition of witness for Prosecution | : | LW15 / PW9 |
| Name | : | திரு. முஸ்தாக்அலிபேக் சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father Name/Husband Name | : | |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 10.06.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.
( எதிரி ஆஜர் இல்லை. கு.வி.நடைமுறை சட்டம் பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது).

<u>**முதல் விசாரணை:**</u>

நான் தற்போது சென்னை நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 10.07.2023ம் தேதி 20 மணிக்கு தூக்கணாம்பாக்கம் காவல்நிலைய பொருப்பில் இருக்கும்போது கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டம் கீழ்அருங்கணம், நெ. 256, முருகன் கோவில் தெருவைச்சேர்ந்த மூர்த்தி மகன் முத்துக்குமரன் வயது-25 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று தூக்கணாம்பாக்கம் காவல் நிலைய குற்ற எண். 91/2023ல் சட்டப் பிரிவுகள் 279, 304-அ இதசவின் படி வழக்கு பதிவு செய்து கணிணி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளேன். **மேற்படி கணிணி முதல்**

**தகவல் அறிக்கை அ.சா–ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைக்கப்பட்டது. ஆய்வாளர் என்னையும் விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

புகார்தாரர் கொடுத்த புகாரின் சம்பவஇடமானது ஆஞ்சநேயர் கோவில் எதிரியில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரரின் புகாரிலோ அல்லது முதல் தகவல் அறிக்கையிலோ எதிரியின் பெயர் விலாசம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரை பெற்றுக்கொண்டு சம்பவம் இடம் சென்று விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை பெற்று அதற்கு ஆதரவாக பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.